இந்து தமிழ் திசை

# சுத்தம் சுகாதாரம்

விழிப்புணர்வுத் தொடர்

Implemented by Gramalaya® Water, Sanitation and Hygiene for all

## பகுதி - 3

## நிலை –3: பள்ளியில் சுத்தம்

### 1 வகுப்பறையைச் சுத்தப்படுத்துதல்

1. கீழே சில சுத்தப்படுத்தப் பயன்படுத்தும் பொருள்களும், படத்தில் சில அசுத்தமான இடங்களும் உள்ளன. அசுத்தமான இடத்தை எந்தப் பொருளைக்கொண்டு சுத்தப்படுத்த வேண்டும் என்பதை சரியாகப் பொருத்துங்கள்... பார்க்கலாம்.

| | A. | B. | C. | D. |
|---|---|---|---|---|
| சுத்தப்படுத்தும் பொருள்கள் | டஸ்டர் (ஒரு துண்டுத் துணி) | ஒட்டடைக்குச்சி | ஏணி | பிரஷ் (ஒரு துண்டுத் துணி) |
| சுத்தப்படுத்த வேண்டிய இடங்கள் |  |  |  |  |

2. நம் பள்ளி வகுப்பறையை நாம் ஏன் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்கான காரணத்தைக் கீழே எழுதுங்கள்.

.......................................................................................................................................

.......................................................................................................................................

### 2 மைதானத்தைச் சுத்தப்படுத்துதல்

1. நீங்கள் விளையாடும் பள்ளி மைதானம் அசுத்தமாக இருக்கிறது. அதைச் சுத்தப்படுத்த நீங்கள் செய்யும் இரண்டு செயல்களை மட்டும் கீழே எழுதவும்.

1 .......................................................................................................

2 .......................................................................................................

### 3 பள்ளியில் சாப்பிடுதல்

1. பள்ளியில் நீங்கள் சாப்பிடும்போது வழக்கமாகச் செய்யும் செயலுக்கு 'மகிழ்ச்சி' (☺) குறியீடு போடவும். செய்யாத செயலுக்கு 'வருத்த' (☹) குறியீடு போடவும்.

| | செயல்கள் | ☺ அல்லது ☹ |
|---|---|---|
| A | சாப்பிடும்போது நிறைய தண்ணீர் குடித்தல் | |
| B | சாப்பிட்டுக்கொண்டே விளையாடுதல் | |
| C | உணவை வீணாக்குதல் | |
| D | உணவைத் தரையில் போடுதல் | |
| E | உணவை நன்கு மெல்லுதல் | |

### 20 விநாடிகளுக்கு கை கழுவும் முறை







கீழே கேட்கப்படும் சுகாதார கேள்விகளுக்கான சரியான பதில்களைச் சொல்லும் முதல்100 குழந்தைகளுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன.

அன்புக்குழந்தைகளே..!

நாம் சுத்தமாக இருந்தால், நோய் கிருமி நம்மை நெருங்காது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால் நாம் சுத்தமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

எப்போதும் கைகளைச் சுத்தமாக வைத்திருப்போம். தினமும் பல் தேய்ப்போம். தினமும் நன்கு உடலைச் சுத்தம் செய்து குளிப்போம்.

**சென்ற வார கேள்விகளுக்கான பதில்கள்**

1. (C) கழிவறையில் 2. (B) சுட வைத்த நீர் 3. (C) முன்-பின் கழுவ வேண்டும்




1. வகுப்பறை சுத்தமாக இல்லாவிட்டால்...?
   A. கிருமிகள் பரவும் B. படிப்பு வராது C. தூக்கம் வராது
2. பள்ளி மைதானம் எப்படி இருக்க வேண்டும்..?
   A. பெரியதாக B. சிறியதாக C. சுத்தமாக
3. பள்ளியில் சாப்பிடும்போது எதைச் செய்யக்கூடாது?
   A. கைகழுவுதல் B. வீட்டுப்பாடம் C. கையைத் துடைத்தல்

**மேலே கண்ட மூன்று கேள்விகளுக்கான பதிலை அனுப்பும் முறை**

- 9940699401 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு SSQUIZ என்று டைப் செய்து, ஒரு மெஸேஜ் அனுப்பவும்.
- உங்களைப் பற்றிய விவரங்கள் கேட்கப்படும். தொடர்ந்து திரையில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலை அளித்து, சிறப்புப் பரிசினைப் பெறுங்கள். வாழ்த்துகள்!

**கீழுள்ள பொருட்களின் அருகில் உள்ள கட்டத்தில் 'மக்கும் குப்பை'க்கு பச்சை நிற வண்ணம் தீட்டுங்கள்; 'மக்காத குப்பை'க்கு நீல நிற வண்ணம் தீட்டுங்கள்.**







QR Code-ஐ ஸ்கேன் செய்து சுகாதார விழிப்புணர்வு பாடல்களைக் கண்டும், கேட்டும் மகிழுங்கள்.